**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**மேட்டூர்.**
**OS.No**. 181/2022
**வழக்கு சாட்சி DW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மைதிலி | கணவர் பெயர் | : துரைசாமி |
| தகப்பனார் பெயர் | ---- | வயது | : 47 |
| கிராமம் | மல்லிகுந்தம் | நாள் | : 17.02.2026 |
| தாலுகா | மேட்டூர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

<u>முதல் விசாரணை :</u>

நான் இவ்வழக்கில் 3ம் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதிகள் தரப்பில் 1வது சாட்சியாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. ச.எண்.251 க்குரிய அ-பதிவேடு உண்மை நகல் **பி.வா.சாஆ.1** ஆகும்.

2. ச.எண்.251 க்குரிய புலவரைபடம் உண்மை நகல் **பி.வா.சாஆ.2** ஆகும்.

3. ச.எண்.251 க்குரிய அடங்கல் பதிவேடு உண்மை நகல் **பி.வா.சாஆ.3** ஆகும்.

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

1) பொதுவாக பட்டா நிலங்களுக்கு அருகில் புறம்போக்கு நிலம் இருந்து அதை பட்டா நிலத்துக்காரர்கள் அனுபவம் செய்து வந்தால் 2A-தண்டதீர்வை என்று குறிப்பிட்டு, வரி வசூல் செய்து, ரசீது வழங்குவோம் என்றால் சரிதான், ஆனால் அது 2006 டன் ரத்து செய்யப்பட்டுவிட்டது. இந்த வழக்கின் தாவா சொத்திற்கு அருகிலும் பட்டா நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள கந்தாய ரசீதுகள் எங்கள் அலுவலகத்தில் தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் அந்த ரசீதுகளில் 2A என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது அனைத்தும் 2006 க்கு முன்பு வழங்கப்பட்டதாகும்.

2) பொதுவாக பட்டா நிலத்துக்காரர்கள் அருகிலுள்ள புறம்போக்கு நிலத்தில் அனுபவததில் இருந்து அதில் மர வகைகள் வைத்திருந்தால் அதற்கு 2C மரவரி என்று ரசீது வழங்குவோம் என்றால் சரிதான். அவ்வாறு வாதி தாக்கல் செய்துள்ள கந்தாய ரசீதுகளிலும் 2C என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிக்கு மேச்சேரி கிராமத்தில் பூர்வீக அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் உள்ளது என்று என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியதற்கான ஆவணங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3) தாவா சொத்தை நான் எப்பொழுதாவது பார்வையிட்டேனா என்றால் நேற்று தான் பார்வையிட்டேன். அந்த நிலங்கள் அனைத்தும் விவசாயம் செய்வதற்கு ஏற்றாற்போல் அமைந்துள்ளது என்றால் சரியல்ல, கரடாக தான் உள்ளது. அரசுக்கு தேவையற்ற மற்றும் தேவையான என இரு வகை நிலங்கள் உள்ளது என்றால் அவ்வாறு இல்லை. எங்களின் வருவாய் துறை ஆவணங்களிலேயே அவ்வாறு தான் உள்ளது என்றும், நான் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கரடாக இருந்தால் அரசு தேவைக்கு அதை பயன்படுத்த முடியாது என்றால் எதிர்கால தேவைக்கு பயன்படுத்தலாம்.

4) அரசால் தரிசு என்று வகைபாடு செய்யப்பட்ட நிலம் எப்போதும் அரசு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுதில்லை என்றால் சரியல்ல. வாதி தான் தாவா சொத்தான அரசு தரிசு நிலத்தில் தன் குடும்பத்துடன் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதிகளும், வாதிகளின் முன்னோர்களும் சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலாகவே தாவா சொத்தை அனுபவம் செய்து விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. கரடு முரடாக இருந்த தாவா சொத்தை சீர் செய்து, விவசாயத்திற்கு உகந்தாற்போல் மாற்றி தற்போது விவசாயம் செய்து வருகிறார்கள் என்றும், இதை தெரிந்தே நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) வாதி தாவாசொத்தில் நீண்ட காலமாக அனுபவத்தில் உள்ளதால் அதற்கு பட்டா வழங்குமாறு வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்து, அது நிலுவையில் உள்ளது என்றால் நான் ஆகஸ்டு 2025ல் தான் மல்லிகுந்தம் கிராம நிர்வாக அலுவலராக

பணியில் சேர்ந்தேன், அதனால் எனக்கு தெரியவில்லை. ஆவணங்களை பார்த்து தான் சொல்லவேண்டும். 2022ல் இருந்த கிராம நிர்வாக அலுவலர் மற்றும அவரது உதவியாளர் வாதியின் தாவா சொத்தின் சுவாதீனத்திற்கு இடையூறு செய்ததால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பழைய கிராம நிர்வாக அலுவலருக்கும், எனக்கும் கூட மேற்கண்ட விவரம் தெரியும் என்றும், ஆனால் அதை மறைத்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட எவ்வித சொத்தும் இல்லாததால் தான் அரசு நிலத்திற்கு பட்டா வழங்குமாறு மனு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அதையும் மீறி நாங்கள் தொந்தரவு செய்ததால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும், அதனால் இந்த வழக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. உள்ளூர் அரசியல் வாதிகள் தூண்டுதலின் பேரில் 2022ல் வாதிகளுக்கு தொந்தரவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.